**வளர்தமிழ் 4** **02-05-2020**

**பாடம் 04**

**1) குறள் :-**உடுக்கை இழந்தவன் ------------

பொருள் :- ஆடை அவிழ்கிறவனுடைய-----------( பாடமாக்கவும் )

**2) சொற்பொருள் அறிவோம்**

உடுக்கை -------------

இடுக்கண்-----------

நாலடியார் -----------

முகர்ந்து --------------

அகவை ---------------

**3) விடை சொல்வோம்**

**வாசிப்போம் : நண்பர்கள்**

1. அம்மா அப்பா எதைச் செய்யத் தடுக்க மாட்டார்கள் ?

2. மீட்டல் செய்வது என்றால் என்ன ?

3. எத்தனை பேர் சேர்ந்து படித்தனர் ?

4. சேந்தனுக்கு உடலில் எந்தப் பாகத்தில் அடிபட்டது ?

5. நட்பு என்றால் என்ன ?

**4) எழுதுதல் நூல் -அலகு 4 முழுப்பயிற்சிகளையும் மீட்டல் செய்வோம்.**

**5) எடுத்துக்காட்டில் உள்ளது போல சொற்களைக் கண்டறிந்து எழுதுவோம்.**

1. எ+கா நாளை வருவான் ------------------

நாளை ------------------------

நாளை ------------------------

நாளை ------------------------

நாளை ------------------------

நாளை ------------------------

| |
|---|
| பாடுகிறான் |
| ஓடுவான் |
| சண்டையிடுவான் |
| ~~வருவான்~~ |
| பாய்கிறான் |
| நடப்பான் |
| வாசித்தான் |
| ஆடுவாள் |
| எழுதுவார் |

**6) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதுக.**

1. அகிலனும் வேழனும் உற்ற ________________________

2. உற்ற நண்பனை கேடு விளைகிற காலத்தில் ________________________

3. வறுமையில் இருக்கும் மக்களுக்கு உணவு ________________________

4. இனிய நண்பனை இடுக்கணில் ____________________ ( பழமொழி )

5. பதறாத காரியம் __________________________ ( பழமொழி )

## 7) வாசிப்போம் : உணவு

# வாசிப்போம்



## உணவு

உடல் வளர்ச்சிக்குக் கட்டாயமாகத் தேவைப்படுவது உணவு. உடலை நோய் வராமல் காப்பதற்கும் உடலை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கும் சத்துள்ள உணவு தேவை. நாம் உண்ணும் உணவில் காய்கறிகள், இறைச்சி, முட்டை, பால், பழங்கள் போன்றவற்றை அதிகம் சேர்க்க வேண்டும். இவை உடல் உறுப்புகள் சீராக இயங்கத் தேவையான வலுவைத் தருகின்றன. நாம் உடலுக்கு ஏற்ற உணவை அறிந்து உண்பதன் மூலம் நோய்கள் வராமல் தடுக்கலாம். உணவு மட்டுமன்றித் தூய்மையான நீரும் உடல் நலத்திற்கு இன்றியமையாதது. நீர் உடல் வெப்பத்தைக் குறைப்பதோடு உணவு நன்றாகச் செரிப்பதற்கும் உதவுகின்றது.

**8) பேசுவோம் : கரும்பு**

பேசுவோம்

## கரும்பு

- ஆசிய நாடுகளில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுகிறது.
- கரும்பில் செங்கரும்பு, வெண்கரும்பு என இருவகைகள் உள்ளன.
- செங்கரும்பு மிகவும் சுவையுடையது.
- கரும்பு பயிரிடப்படும் இடம் கரும்புத் தோட்டம் எனப்படும்.
- கரும்பு இனிப்புச் சுவையுடையது.
- கரும்பிலிருந்து கருப்பஞ்சாறு எடுப்பர்.
- கருப்பஞ்சாற்றில் இருந்து சக்கரை செய்வார்கள்.
- பொங்கல் விழா அன்று கரும்பு கட்டுவர்.
- கலைமகள் விழாவின்போது முக்கனியுடன் கரும்பையும் படைப்பர்.
- கரும்பு ஆறு அடியிலிருந்து பத்தொன்பது அடி உயரம் வரை வளரும்.
- யானை கரும்பை விரும்பித் தின்னும்.

9) கீழே உள்ள படத்தைப் பார்த்து 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுவோம்

